MAR 2008

1301

Register Number

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV - க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $8 \times 2 = 16$

1. திரு. வி. க. -வின் பெற்றோர் யாவர் ?
2. சினம் எவற்றைக் கொல்லும் ?
3. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிக் கருத்துகள் யாவை ?
4. உண்மைக் கிறித்தவருக்குரிய இலக்கணம் யாது ?
5. சீதையைக் கண்ட அனுமனின் மகிழ்ச்சி யாது ?
6. பாடாண் திணை - விவரி.
7. 'தொன்னை உள்ளம்' என்பது என்ன ?
8. கடலின் மேன்மைத் தன்மைகள் யாவை ?
9. அறிவியல் அறிஞர் செய்தவை எவை ?
10. பிள்ளைத்தமிழ் - இலக்கணம் கூறுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

11. தமிழின் சிறப்புகளை விளக்குக.

12. புகழுடையார் எய்தும் மேன்மையை விவரி.

13. ஊராண்மைக்குரிய செல்வங்கள் யாவை ?

14. சுற்றுப்புறத்தை மாசுபடாமல் காக்க அனைவரும் செய்ய வேண்டுவன எவை ?

15. கழுகுமலையின் வளத்தைக் காவடிச் சிந்து எவ்வாறு கூறுகிறது ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 7 = 7

16. ஊக்கமே சிறந்ததென்பதனையும், அதன்ன உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

17. அனுமன் அறநெறிகளை உணர்ந்தவன் என்பதனைக் கம்பராமாயணம் கொண்டு விளக்குக.

18. 'விண்மீன் கூட்டம்' என்னும் தலைப்பில் வாணிதாசன் கூறியுள்ளனவற்றைத் தொகுத்து எழுதுக.

19. கொடியவர்களின் தீச்செயலையும், இயேசுநாதரின் அருள் திறனையும் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : 2 + 2 + 3 + 3 = 10

20. 'வெள்ளத்' எனத் தொடங்கும் குறளையும், 'நிலம்' என முடியும் குறளையும் எழுதுக.

21. அ) 'நாடெலாம்' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை எழுதுக.

ஆ) 'பேண நோற்றது' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

V. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. உலகப் பொதுமறை எனச் சிறப்பிக்கப்படும் நூல்

அ) சிலப்பதிகாரம்

ஆ) திருக்குறள்

இ) திரிகடுகம்.

23. புறநானூறு - இத்தொடரைப் பிரிக்கும் முறை

அ) புறம் + நானூறு

ஆ) புறம் + நான்கு + நூறு

இ) புற + நானூறு.

24. கோடிட்ட இடங்களில் சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

"குன்றாத நச ............... யன் யூத ............... க்குக் குலவேந்தன்
( ரே / றே ) ( ரு / று )

25. பொருத்துக :

| | | |
|---|---|---|
| புகார்க் காண்டம் | – | 13 |
| மதுரைக் காண்டம் | – | 10 |
| வஞ்சிக் காண்டம் | – | 7 |
| | – | 17. |

26. திரிகடுகம் ................ அமைந்த நூல்

அ) வெண்பாக்களால்

ஆ) ஆசிரியப்பாக்களால்

இ) வஞ்சிப்பாக்களால்.

27. வசை என்ற சொல்லின் பொருள் ................ ( பலி / பழி )

28. கீழ்க்காணும் செய்யுள் அடிகளில் உள்ள மோனையைச் சுட்டுக :

நானிலம் பரப்புஞ் சோதி

நாயகக் கடவுள் தம்மை.

29. கீழ்க்காணும் குறட்பாவைச் சீர்பிரித்து எழுதுக :

நெடும்புனலுள் வெல்லும்முதலை அடும்புனலின்

நீங்கின் அதனைப்பிற.

30. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் ................ .

அ) ஆறு

ஆ) ஏழு

இ) ஐந்து.

31. திரு. வி. க. எழுதிய நூல்களுள் ஒன்று ................ .

அ) திருவள்ளுவமாலை

ஆ) பெண்ணின் பெருமை

இ) சங்கொலி.

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $5 \times 2 = 10$

32. உள்வளத் திறமை என்பது என்ன ?

33. திரு. வி. க. 'கொழுகொம்பு' என்று எதனைக் குறிப்பிடுகிறார் ?

34. மு. வ. அவர்களுடைய நெஞ்சில் இனிப்பது எது ?

35. செய்ந்நன்றி மறவாமைக்கு வ. உ. சி. எடுத்துக்காட்டும் திருக்குறள் யாது ?

36. 'இராமன் விளைவு' - விளக்குக.

37. மனைமாட்சியை எக்குறளுக்கு இலக்காக அமைக்க வேண்டும் ?

38. புகழ்பாடச் சொன்ன புல்லர்களாகக் குறிப்பிடப்படுவோர் யாவர் ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

39. அப்துல் கலாம் நம் மக்களை எவ்வாறு மூவகைப்படுத்துகிறார் ?

40. 'வண்ணம்' பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

41. எவ்வெவற்றைப் படிக்குமாறு மு. வ. தொகுத்து உரைக்கிறார் ?

42. கொடிகட்டிப் பறந்த தீய மரபுகள் யாவை ?

43. உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

[ Turn over

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. 'தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ' என்று திரு. வி. க. எவ்வாறு பெருமிதம் கொள்கிறார் ?

45. வ. உ. சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

46. ஒலி, ஒளி பற்றிய உண்மையைச் சாத்தனார் எவ்வாறு விளக்குகிறார் ?

47. ஔவையாருக்கும் செல்வர்களுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைச் சுருக்கி வரைக.

IX. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

48. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'மணி முடி' எனப் போற்றப்படும் பெரியாரின் பண்பு .................. .

அ) உழைப்பு

ஆ) எல்லோரையும் மதித்தல்

இ) சுறுசுறுப்பு.

49. கோடிட்ட இடத்தை நிரப்புக :

இயற்கை ஓவியம் .................. .

50. ஆண்மான் எனும் பொருள் தரும் சொல் .................. .

அ) கலை

ஆ) களை

இ) கழை.

51. கீழ்க்காணும் விடை வருமாறு வினாத்தொடர் அமைக்க :

வ. உ. சி. அவர்களுக்கு உடலும் உயிருமாய் இருந்தது சுதேசி நாவாய்ச் சங்கம்.

52. கீழ்க்காணும் தொடரை ஒருமை - பன்மை பிழை நீக்கி எழுதுக.

அறிஞர் கண்ட உண்மைகள் மன்பதைக்கு உரியது.

53. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளைத் திருத்துக :

எட்டப்ப மன்னரின் சபையில் தலைமை தமிழ் புலவராய் கடிகை முத்துப்பிள்ளை என்ற பெரியார் இருந்தார்.

54. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) பவளவாய் ஆ) தேன் தமிழ்.

55. கீழ்க்காணும் சொற்களுள் ஒருபொருள் தரும் இரு சொற்களை தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) திங்கள் ஆ) சுடரவன்

இ) தரு ஈ) மதி.

56. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

அனந்தனுக்கு காது ஏது

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஒன்றினை விரித்து எழுதுக :

அ) முப்பால் ஆ) ஐந்திணை.